

# தலைவர் காட்டிய தலைவர்



றவூப் ஹக்கீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்'

அன்புள்ள அம்பாறை மாவட்ட வாக்காளப் பெருமக்களே!
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் போராளிகளே!
அஸ்ஸலாமு அலைக்கும்.

எம் சமூகத்தின் தன்மானத்தையும்,தனித்துவத்தையும் காக்க இறைவன் எமக்களித்த விடி வெள்ளியும், நம்பிக்கை நட்சத்திரமும்,தானைத் தளபதியுமான மர்ஹூம்.அல்ஹாஜ் M.H.M.அஷ்ரஃப் அவர்களை இழந்த வேதனையில் இரத்தக் கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கும் எமக்கு,இவ்வாறான சூழல் ஏற்படுமிடத்து எமது விடுதலைப்பாதையை முன்னெடுத்துச் செல்லும் உபாயங்களை சொல்லித்தரத்தவறவுமில்லை.எமது கவலைகளை போக்க முன்கூட்டியே ஆறுதல் சொல்லத் தவறவும் இல்லை. மேலும், எமது போராட்டத்தை கூர்மைப்படுத்த அன்னார் கூறிய வசனங்களை எம் உள்ளங்கள் மறக்கவுமில்லை.

அதாவது;

'எனது இரைச்சல் அடங்கி விட்டதற்காய்
நமது எதிரி வென்று விட்டான் என்று - நீ
குழம்பி விடக்கூடாது!

அன்றுதான் போராட்டம் எனும்
நமது இருண்ட குகைக்குள்
வெற்றிச் சூரியனின்
வெண் கதிர்கள் நுளைகின்றன
என்பதை மறந்து விடவும் கூடாது

தலைவர்கள் ஒரு போதும்
மரணிப்பதில்லை என்பதை, நான்
சொல்லித் தரவில்லையா?

என்னை அதற்காய் நீ
மன்னித்து விடுவாயாக!'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொன்ன எம் தலைவர் இன்னும் சொன்னார் .

போராளிகளே! புறப்படுங்கள்
ஓரத்தில் நின்றுகொண்டு
ஓய்வெடுக்க நேரம் இல்லை!

எனவேதான், எமது தலைமைத்துவம் காட்டிய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல, போதுமான அனைத்துத் தகுதிகளையுமுடையவர் எமக்குள் யார்? என்பதை அடையாளம் காணவும், காட்டவும் தலைமைத்துவம் தவறவில்லை.

அவ்வாறே, நாமும் எமது அடுத்த தலைமைத்துவத்தை அடையாளம் கண்டிருக்கின்றோம். அன்னாரும் எமது மறைந்த தலைவர் போன்று ஊழல், மோசடி. பொய், மது, சூது போன்ற அனைத்தையும் ஒழித்து, சத்தியம் நிலை நாட்டப்படவேண்டும் என்ற அவாவோடும், இச்சமூகத்தின் விடுதலைக்காகவும்,முன்னேற்றத்திற்காகவும் பிரதேச வாதத்துக்கு அப்பால் எமது போராட்டத்தை வழிநடாத்திச் செல்வார் என்றும் நம்புகின்றோம்.

அவர் யார்?

இவைகளுக்கும் மேலாக அவரது திறமைகள் என்ன?

ஆம்..

| | |
|---|---|
| அவர்தான் சகோ. | : **ரவூப் ஹக்கீம்** |
| பிறப்பு | : 13. 04. 1960 நாவலப்பிட்டி |
| கல்வி உயர் கல்வி | : ஜப்பார் மகா வித்தியாலயம், கலகெதர, கண்டி<br>றோயல் கல்லூரி- கொழும்பு |
| 1980-1983 | : இலங்கை சட்டக் கல்லூரி கொழும்பு |
| 1984 | : உயர் நீதிமன்ற சட்டத்தரணி |
| 1987 | : லண்டனில் இங்கிலாந்து சட்டமன்ற சொலிசிட்டர் இறுதிப் பரீட்சையில் சித்தி. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆற்றல்:**

* 10 வயதில் மிகச் சிறந்த பேச்சாளருக்கான சவால் கேடயம் (1970). கண்டி மீலாத் கமிட்டி.
* சிறந்த (கனிஷ்ட) தமிழ்ப் பேச்சாளர் (1974)
* மிகச் சிறந்த தமிழ்ப் பேச்சாளருக்கான பொன். ராமநாதன் நினைவுப் பதக்கம் (1976)
* அகில இலங்கை பேச்சுப் போட்டியில் முதல் பரிசு (1977) கம்பளை சாஹிராக் கல்லூரி நடாத்தியது

* சிரேஷ்ட தமிழ் விவாதக் குழுத் தலைவர் றோயல் கல்லூரி (1975-1978)
* தமிழ் நாடக மன்றத் தலைவர், றோயல் கல்லூரி (1977)
* **Interact** கழகம் (மாவட்டம்-321) பொருளாளர் உட்பட பொறுப்புவாய்ந்த பதவிகள் (1974-1979)
* எழுந்தமான பேச்சுப் போட்டியில் சேர் பொன். இராமநாதன் தங்கப் பதக்கம் - சட்டக் கல்லூரி

**ஆளுமை**

இலங்கை சட்டக் கல்லூரி :

* விவாதக் குழு உறுப்பினர் (தமிழ் + ஆங்கிலம்)
* அறம் கூறும் அவை பேச்சுப் போட்டி(ஆங்கிலம்) தொடர்ந்து மூன்று ஆண்டுகள்
* தமிழ் மன்றத் தலைவர் (1982)
* சட்ட மாணவர் மன்ற செயற்குழு உறுப்பினர்
* சட்டக் கல்லூரி முஸ்லிம் மஜ்லிஸ் பொதுச்செயலாளர்

## சட்டத்துறை (1984 - 1994)

அடிப்படை உரிமை மீறல் வழக்குகளிலும், பொதுவாக சிவில் குற்றவியல், மேன்முறையீட்டு வழக்குகளின் சட்டத்தரணியாக 10 ஆண்டுகள் அனுபவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரசியல் துறை**

* 1994 பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு
* பாராளுமன்ற அமர்வுகளுக்கு தலைமை தாங்கும் பொறுப்பைப் பெற்ற, இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றிலயே மிகவும் வயது குறைந்த தலைவராகத் தெரிவு.

| | |
|---|---|
| 1989-1991 | : ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் செயற்குழுச்செயலாளர் |
| 1992 | : ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிப் பொதுச் செயலாளர |
| 1993-2000 ஆகஸ்ட் | : ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் |
| 2000 ஆகஸ்ட் முதல் | : பொதுச் செயலாளர், தேசிய ஐக்கிய முன்னணி |
| 1991-1993 | : சர்வகட்சி மாநாட்டின் ஸ்ரீ.ல.மு.கா. : கட்சியின் நிரந்தரப் பிரதிநிதி |
| 1996 | : சுவிட்சர்லாந்து அரசாங்கத்தின்பேரில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான கருத்தரங்கில் கலந்து கொள்ளல், இலங்கை இனப்பிரச்சினைக்கு சமஷ்ட்டித் தீர்வு தொடர்பாக அங்குள்ள ∴பிரைபேர்க் உயர்கல்வி நிறுவனத்தில் விரிவுரை நிகழ்த்தல |
| 1997 | : நீதி, அடிப்படை உரிமைகள் பற்றிய அவுஸ்திரேலிய அரசியலமைப்பு அனுபவமும்,சீர்திருத்தமும் சம்பந்தமாக ஆராய்வதற்காக அந்நாட்டின் அழைப்பை ஏற்று சிட்னி விஜயம். 'இலங்கையின் சமாதான முயற்ச்சிகளில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல் தலைப்பில் கன்பர(Canberra) பல்கலைக்கழகத்தில் விரிவுரை ஆற்றல் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996 :பொதுநலவாய பாராளுமன்ற அமைப்பின் கொழும்பு மாநாட்டில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தல், இலங்கையின் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கில் தென்னாபிரிக்கா, வடஅயர்லாந்து, பிலிப்பைன்ஸ் முதலான நாடுகளின் அரசியல் நெருக்கடி நிலைமைகளை ஆராய்வதற்கு அனுப்பப்பட்ட இலங்கைப் பாராளுமன்றத்தூதுக் குழு உறுப்பினர்களுக்கு தலைமை தாங்கல்.

**பொதுநலவாய / சார்க் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களில் இலங்கையின் சார்பில் பங்குபற்றல்.**

1995 : தன்சானியா.

1996 : சியாரலியோன், பங்களாதேஷ்,

1997 : பாகிஸ்தான்.

1998 : ஹொங்கொங்.

2000 : சிம்பாப்வே
(ஆகக் கூடுதான வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பு நடவக்கைகளில் ஈடுபட்ட ஒரே இலங்கையர் இவரே)

1997 : இனக் குழுக்கள் இடையிான மோதல் தவிர்ப்பு நடவடிக்கைகள் சம்பந்தமாக ஆராயும் பொருட்டு ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் வொஷிங்டன், அட்லான்டா, கலிபோனியா, இடாஹோ,மின்னசொட்டா ஆகிய பிராந்தியங்களுக்கு விஜயம்.

***இவ்வாறான அநுபவங்களும் வகித்த பதவிகளும் அன்னாரின் ஆளுமையை மேலோங்கச் செய்ய உறுதுணையாய் இருந்திருக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் தோன்ற நியாயமில்லை. அல்லாஹ் எல்லாவற்றிற்கும் போதுமானவன்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மறைந்த எமது தலைவருக்கு "ஜென்னதுல் பிர்தௌஸ்"
எனும் சுவர்க்கத்தை வழங்க வேண்டும் எனவும்
புதிய நமது தலைவருக்கு திறமை, நேர்மை, பொறுமை,
கண்டிப்பு, தேகாரோக்கியம் ஆகிய அனைத்தையும்
வழங்கி, நீண்ட ஆயுளையும் வழங்கவேண்டும் எனவும்
எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்!'



ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 1ம் இலக்க அங்கத்தவராகவும், ஸ்ரீ. ல. மு. கா. சம்மாந்துறை அமைப்பாளராகவும், வடக்கு-கிழக்கு மாகாண சபை உறுப்பினராகவும் இருந்து எம்மையெல்லாம் விட்டு மறைந்த **சகோ. எம். வை. எம். மன்சூர்** அவர்களின் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட

**மன்சூர் மன்றத்தின்**

சார்பாக அதன் தலைவர் எம்.ஐ.எம்.மன்சூர் அவர்களினால் கௌஸ் ஓப்செற் அச்சகத்தில் 28.09.2000 அன்று அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெளியீடு:
மன்சூர் மன்றம்,
சம்மாந்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org